

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2024

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 315 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 11 – செவ்வாய்க்கிழமை 25 ஜுன் 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 315 : Thiruvalluvar Year - 2055 - Aani 11 - Tuesday 25 June 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


### லட்சக்கணக்கான மருத்துவ மாணவர்கள் விரக்தியில் உள்ளனர்!

# ‘நீட்’ தேர்வு ஒத்திவைப்புக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

## மாநில உரிமைகளை மீட்டெடுத்து மாணவர்களிடம் நம்பிக்கையை விதைப்போம்!

**சென்னை, ஜுன் 25-**

**“லட்சக்கணக்கான மருத்துவ மாணவர்கள் முதுநிலை ‘நீட்’ தேர்வு ஒத்தி வைக்கப்பட்டதால் விரக்தியில் உள்ளனர்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



நடப்பு ஆண்டில் நடைபெற்ற இளநிலை படிப்புகளுக்கான நீட் தேர்வில் இதுவரை இல்லாத அளவு மோசடி நிகழ்ந்துள்ளது. ஆள் மாறாட்டம், தேர்வு வினாத்தாள் கசிவு, கருணை மதிப்பெண் என பல வழிகளில் முறைகேடு நடந்துள்ளது. குறிப்பாக இதுபோன்ற சம்பவங்கள், பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களான ராஜஸ்தான், மகாராஷ்டிரா, பீஹார் உள்ளிட்ட மாநிலங்களில் நடந்துள்ளது.

**‘நீட்’ முறைகேடு: பா.ஜ.க. ஆளும் உ.பி.யைச் சேர்ந்தவர்!**

பிஹார் மாநிலம் பாட்னாவில் நீட் தேர்வுக்கு முன்னதாக வினாத்தாள் கசிந்ததாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில் மாணவர்கள் சிலரையும் அவர்களின் கூட்டாளிகளையும் கைது செய்துள்ளனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் உத்தரபிரதேச மாநிலம் கிரேட்டர் நொய்டாவை சேர்ந்த ரவி அத்ரி என்ற இளைஞருக்கு இதில் தொடர்பு இருப்பது தெரிய வந்தது. இதன் அடிப்படையில் கிரேட்டர் நொய்டாவின் நீம்கா கிராமத்தில் ரவி அத்ரியை உ.பி. போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

2024-ம் ஆண்டு நீட் வினாத் தாள் கசிவுக்கு ரவி அத்ரி மூளையாக செயல்பட்டதாக கூறப்படுகிறது. பல்வேறு மாநிலங்களில் முந்தைய வினாத் தாள் கசிவு சம்பவங்களிலும் இவருக்கு தொடர்பு இருப்பதாக தெரிகிறது. ‘சால்வர் கேங்’ என்ற நெட்வொர்க் மூலம் வினாத் தாள் மற்றும் அதற்கான விடைகளை சமூக ஊடகங்களில் பதிவேற்றுவது இவரது செயல்பாடாக இருந்துள்ளது. இதற்கு முன் மருத்துவ நுழைவுத் தேர்வு வினாத்தாள் கசிவில் ரவி அத்ரிக்கு உள்ள தொடர்பு காரணமாக டெல்லி போலீஸார் இவரை கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக உ.பி. போலீஸார் கூறுகையில், கடந்த 2007-ம் ஆண்டில் ரவி அத்ரியின் குடும்பம் அவரை மருத்துவ நுழைவுத் தேர்வுக்கு தயாராக ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவுக்கு அனுப்பியது. ரவிஅத்ரி 2012-ல் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்று ஹரியானாவின் ரோத்தக் நகரில் உள்ள பி.ஜி.ஐ. மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். ஆனால் 4-ம் ஆண்டு தேர்வை அவர் எழுதவில்லை. அதற்குள் தேர்வு மாஃபியா கும்பலுடன் அவருக்கு தொடர்பு ஏற்பட்டு மற்ற மாணவர்களின் பினாமியாக அமர்ந்து தேர்வு எழுதத் தொடங்கியவர் என்றனர்.

இந்நிலையில் நாடு முழுவதும் நீட் முதுநிலை தேர்வு நடைபெறவிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தேர்வுக்கு 12 மணி நேரத்துக்கு முன்னதாக இந்த தேர்வு ரத்து செய்யப்படுவதாக தேசிய தேர்வுகள் வாரியம் அறிவித்தது.

இந்தத் தேர்வுகள் பல்வேறு மையங்களில் நடைபெறும் நிலையில், ஏராளமான மருத்துவ மாணவர்கள் தேர்வுக்காக முன்னரே தேர்வு மையங்களை நோக்கி பயணத்தில் இருந்த நிலையில், இந்த அறிவிப்பு வெளியானதால் மருத்துவ மாணவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இளநிலை படிப்புகளுக்கான நீட் தேர்வில் ஏராளமான மோசடி புகார்கள் வெளிவந்த நிலையில், முதுநிலை நீட் தேர்விலும் அந்த முறைகேடுகள் நடைபெற்றிருக்கலாம் என்பதால் இந்த தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. தேசிய தேர்வுகள் வாரியத்தின் இந்தச் செயலுக்கு பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

**‘நீட்’ தேர்வு குளறுபடிகள்! முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘மாணவர்களின் தகுதிக்கான அளவு கோல் எனப் பொய்வேடம் தரித்த நீட் தேர்வு ஒரு மோசடி’ என்றும், ‘மாணவர்களுக்கு எதிரான சமூகநீதிக்கு எதிரான, ஏழைகளுக்கு எதிரான இந்த நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும்’ என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். சமீபத்தில் நடைபெற்ற நீட் தேர்வில் ஏற்பட்ட குளறுபடிகள் மற்றும் மோசடிகளையும் கண்டித்ததோடு, நீட் தேர்வு முறையை ஆதரிப்பதை ஒன்றிய அரசு இத்துடன் நிறுத்திக்கொள்ள வேண்டும்’ என்றும் வலியுறுத்தினார்.

> **“யூ.ஜி.சி. நெட் தேர்வு இரத்தானதைத் தொடர்ந்து, தேசிய தேர்வு வாரியம் (NBE) நடத்தும் முதுநிலை நீட் தேர்வும் ஒத்தி வைக்கப்பட்டு இருப்பது ஆயிரக்கணக்கான நமது மருத்துவர்களை நம்பிக்கை இழக்கச் செய்துள்ளது. இவை எப்போதோ ஏற்படும் அரிய நேர்வுகளாக இல்லாமல், கையாலாகாத, மையப்படுத்தப்பட்ட தேர்வுமுறையின் உடைந்த அமைப்பின் சவப்பெட்டி மீது அறையப்படும் இறுதி ஆணிகளாக அமைந்துள்ளன.”**

அதனைத் தொடர்ந்து தற்போது தேசிய தேர்வு வாரியம் (NBE) நடத்தும் முதுநிலை நீட் தேர்வும் ஒத்திவைக்கப்பட்டது குறித்து முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (23.6.2024) வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவு வருமாறு:-

**யூ.ஜி.சி. நெட் தேர்வு இரத்தானதைத் தொடர்ந்து, தேசிய தேர்வு வாரியம் (NBE) நடத்தும் முதுநிலை நீட் தேர்வும் ஒத்திவைக்கப்பட்டு இருப்பது ஆயிரக்கணக்கான நமது மருத்துவர்களை நம்பிக்கை இழக்கச் செய்துள்ளது. இவை எப்போதோ ஏற்படும் அரிய நேர்வுகளாக இல்லாமல், கையாலாகாத, மையப்படுத்தப்பட்ட தேர்வுமுறையின் உடைந்த அமைப்பின் சவப்பெட்டி மீது அறையப்படும் இறுதி ஆணிகளாக அமைந்துள்ளன.**

**இந்த முறைகேடுகள் வெளிவந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், தொழில்முறைப் படிப்புகளுக்கான நியாயமான, சமத்துவத்தன்மை கொண்ட தேர்வுமுறையை ஏற்படுத்தி, பள்ளிக்கல்வியின் முதன்மையை உறுதிசெய்து, உயர்கல்விக்கான அடிப்படையாக அதனை ஆக்கி, தொழில்முறைப் படிப்புகளுக்கான தேர்வுமுறையைத் தீர்மானிப்பதில் மாநிலத்தின் உரிமைகளை மீட்டெடுத்து, அனைத்துக்கும் மேலாக, நமது மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடம் மீண்டும் நம்பிக்கையை விதைத்து சிறப்பான எதிர்காலத்துக்குத் திட்டமிடக் கைகள் கோப்போம்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### மோடி தலைமையிலான திறமையற்ற அரசால்

# மாணவர்களின் எதிர்காலத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல்!

## காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி விமர்சனம்!

புதுடெல்லி, ஜுன் 25 -

மாணவர்களின் எதிர்காலத்துக்கு மோடி தலைமையிலான திறமையற்ற அரசு, மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது என்று காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.



காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், முதுநிலை மருத்துவ நீட் தேர்வு ஒத்தி வைப்பு, மோடி ஆட்சியில் கல்வித்துறை சீரழிந்து கிடப்பதற்கு மற்றுமொரு உதாரணம் என சாடியுள்ளார்.

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் மாணவர்கள் படிப்பதற்கு கட்டாயப் படுத்தப்படாமல், தங்களது எதிர்காலத்தை காப்பாற்ற, ஒன்றிய அரசுடன் போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக ராகுல்காந்தி விமர்சித்துள்ளார்.

வினாத்தாள் கசிவு, முறைகேடு விவகாரம் போன்றவற்றை வழக்கம்போன்று வாய்மூடி மௌனியாக பிரதமர் மோடி வேடிக்கைப் பார்ப்பதாகவும் சாடியுள்ளார்.

கல்வி மாஃபியா முன், மோடி அரசு செயலற்று முடங்கிக் கிடப்பதை இது வெட்டவெளிச்சமாக்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் எதிர்காலத்துக்கு மோடி தலைமையிலான திறமையற்ற அரசு மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளதாகவும், இவற்றிலிருந்து நாட்டின் எதிர்காலத்தை காப்பாற்ற வேண்டும் என்றும் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### நாடாளுமன்றம் கூடியது!

# முதல் இரு நாட்கள் புதிய எம்.பி.க்களின் பதவியேற்பு!

## ஜுன் 27ஆம் தேதி நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரை!

*புதுடெல்லி, ஜுன் 25-*

*18வது மக்களவையின் முதல் கூட்டத் தொடர் நேற்று தொடங்கியது. முதல் இரு நாட்களில் புதிய எம்.பி.க்கள் பதவி யேற்கின்றனர்.*



*ஏப்ரல் 19-ம் தேதி முதல் ஜுன் 1-ம் தேதி வரை 7 கட்டங்களாக மக்களவைத் தேர்தல் நடைபெற்றது. கடந்த 4-ம் தேதி தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன. ஆட்சி அமைக்க 272 இடங்கள் தேவை என்ற நிலையில், பா.ஜ.க. 240 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.*

*காங்கிரஸ் 100 இடங்களில் வெற்றி பெற்றது. காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளை உள்ளடக்கிய இந்தியா கூட்டணி 232 இடங்களில் வெற்றி பெற்றது.*

*இதனைத் தொடர்ந்து ஐக்கிய ஜனதாதளம், தெலுங்கு தேசம் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் கடந்த 9-ம் தேதி பிரதமர் மோடி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பதவியேற்றது.*

*இந்நிலையில், நாடாளுமன்ற மக்களவையின் முதல் கூட்டத் தொடர் நேற்று தொடங்கியது. முதல் இரு நாட்கள் புதிய எம்.பி.க்களின் பதவி யேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.*

*பா.ஜ.க.வைச் சேர்ந்த பர்த்ருஹரி மஹ்தாப் மக்களவையின் தற்காலிக தலைவராக இருந்து, புதிய எம்.பி.க்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார். மூன்றாவது நாளில் மக்களவை புதிய சபா நாயகர் தேர்வு செய்யப்படுவார். ஜுன் 27-ம் தேதி நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவர்கள் உரையாற்றுகிறார்.*

*இந்தக் கூட்டத் தொடரில் நீட் விவகாரம், விலைவாசி உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்ப எதிர்க் கட்சிகள் ஆயத்தமாகி வருகின்றன.*